DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.16/2026

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | சுமதி (Lw - 10) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 21.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், அகியம்பட்டியில் குடியிருந்து ஹோட்டல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன்.

தேதி நினைவில் இல்லை. சுமார் 9 மாதங்களுக்கு முன்னர் சுமார் காலை 05.30 மணிக்கு நான் எனது கடைக்கு வந்தபோது கண்ணம்மா வீட்டின் அருகே இவ்வழக்கில் இறந்துபோன மணி என்பவர் சாலையின் ஓரத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரி ருக்மணி அவரது நீலநிற ஸ்கூட்டியை ஓட்டிவந்து மணியின் மீது மோதினார். விபத்தில் மணிக்கு தலை மற்றும் கழுத்தில் அடிபட்டிருந்தது. மணி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நாங்கள் மணியை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் எனது கடையில் வேலைசெய்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போதுதான் கடைக்கு வந்தேன். சம்பவத்தின்போது இருட்டாக இருந்தது என்றால் சரியல்ல. சோலார் லைட்

எரிந்துகொண்டிருந்ததால் வெளிச்சமாகத்தான் இருந்தது. நான் கடைக்குசொன்றபோது சத்தம் கேட்டுதான் விபத்தை பார்த்தேன் என்றால் சரிதான். இறந்துபோன மணி எனது உறவுக்காரர் என்றால் சரியல்ல. ஒரே ஊரை சார்ந்தவர். இறந்துபோன மணி எனது ஊரை சார்ந்தவர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டி தாக்கல் செய்யப்பட்ட பொய்யான வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடைக்கு சென்றபோது அங்கு வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்தபோது சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**